**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 234 /2016**

**Deposition of P.W. 1**

Name : சந்திர பிரபா
S/o, D/o, W/o :
Village :
Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
**Dated: 21.08.2024**

**முதல் விசாரணை–**

நான் தற்சமயம் மிடாலத்தில் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் கல்குளம் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வந்த போது வேளிமலை கிராம நிர்வாக அலுவலகராக கூடுதல் பொறுப்பு கவனித்து வந்தேன். 13.09.2012ம் தேதி கல்குளம் வட்டாட்சியர் புவியியலாளர், குறுவட்ட நில அளவையர் ஆகியவர்களுடன் வேளிமலை கிராமத்தில் உள்ள சட்ட விரோத கல்குவாரி தொடர்பாக புல தணிக்கை மேற்கொண்ட போது வேளிமலை கிராமம், சோலாப்புரம் அருகே கொற்றிக்கோடு குளத்திற்கு அருகே புல எண்.3/4 B–ல் பாறை வெட்டி எடுக்கப்பட்டது கண்டறியபட்டது. பின்னர் கல்குளம் வட்டாட்சியர் அறிவுரைபடி குறுவட்ட நில அளவையர், தக்கலை வருவாய் ஆய்வாளர் ஆகியவர்களுடன் நில அளவை மேற்கொண்டதில் மேற்படி குளத்தில் 3.24.00 ெ ஹக்டேர் பரப்பளவில் பாறை வெட்டி எடுக்கப்பட்டது கண்டறியப்பட்டது. மேற்படி நிலம் அஜய்ராய் என்பவர் மனைவியும், சினேகலின் சுஜா என்கிற சினேகா அஜய் என்பவருக்கு சொந்தமான இடம் என தெரிய வந்ததின் படி மேற்படி நபர் அரசிடமிருந்து உரிய அனுமதி

உரிமம் இல்லாமல் சட்ட விரோதமாக கல்குவாரி நடத்தி வந்தது கண்டறியப்பட்டது. எனவே, அன்னாரின் மீது சட்ட விரோதமாக கனிமம் மற்றும் சுரங்கம் வெட்டி எடுத்தது மற்றும் விற்பனை செய்தது, இயற்கை வளங்களை சட்ட விரோதமாக பயன்படுத்தியது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டி கொற்றிக்கோடு காவல்நிலைய உதவி ஆய்வாளரிடம் 10.10.2012ம் தேதி புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மாவட்ட ஆட்சியின் உத்தரவு படி வருவாய் கோட்டாட்சியர் கூறியதன் அடிப்படையில் நான் புகார் மனு கொடுத்தேன். வேளி மலை கிராம புல எண்.3/4 B–ல் பாறை வெட்டி எடுக்க மாவட்ட ஆட்சியர் உரிமம் வழங்கி இருந்தார் என்று சொன்னால் கொடுக்கப்பட்டிருந்தது ஆனால் அது ரத்தாகி இருந்தது. உயர்நீதிமன்ற உத்தரவு வழக்கு எண். WP.9482/2006ன் 01.11.2006 தேதியிட்ட உத்தரவு படி மேலும் 982 நாட்கள் பாறை வெட்டி எடுக்க மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களால் அனுமதி வழங்கப்பட வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதன் படி மாவட்ட ஆட்சி தலைவர் உத்தரவு எண்.436/பு.ம.சு/2006 தேதி 23.07.2007 படி உத்தரவு வழங்கப்பட்டிருந்த விபரம் எனக்குத் தெரியாது. 21.07.2008ம் தேதி குவாரி உரிமையாளர் அஜய்ராஜ் காலமான பிறகு அந்த உரிமத்தை அவரது மனைவி சினேகா அஜய் என்பவர் பெயருக்கு மாவட்ட ஆட்சியர் உத்தரவு எண். 696/பு.ம.சு/2008ன் தேதி 17.12.2008ன் படி மாற்றம் செய்யப்பட்டு குவாரி பணிகள் செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 13.09.2012ம் தேதி நகல்

ஆய்வுகள் மேற்கொண்டோம். நாங்கள் ஆய்வு செய்த தேதியில் குவாரி பணிகள் எதுவும் நடைபெறவில்லை என்றால் ஞாபகமில்லை. நாங்கள் ஆய்விற்கு சென்றதற்கு பல மாதங்களுக்கு முன்பாகவே குவாரி பணிகள் நிறுத்தப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. குவாரி எங்கள் ஆய்விற்கு 6 மாதங்களுக்கு முன்னரே நிறுத்தப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. உரிமம் புதுபிக்கப்பட்டது தொடர்பாக நான் விசாரிக்கவில்லை. உரிமம் உள்ள காலத்தில் வெட்டி எடுக்கப்பட்ட பாறையின் அளவை உரிமம் முடிந்த பிறகு வெட்டி எடுக்கப்பட்டதாக பொய்யாக புனைவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உரிமம் இருந்த நிலையில் ஒவ்வொரு மாதமும் வெட்டி எடுக்கப்பட்ட பாறையின் அளவினை வட்டாட்சியருக்கும், கோட்டாட்சியருக்கும், உதவி புவியலாளருக்கும் அறிக்கை கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. உரிமம் இருந்த காலத்தில் வெட்டி எடுக்கப்பட்ட பாறையின் சதுர மீட்டர் அளவு குறித்து நான் அறிக்கை கொடுத்ததில்லை. கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை கொடுக்க வேண்டிய அவசியமில்லை. உரிம காலத்தில் எவ்வளவு சதுர மீட்டர் எடுக்கப்பட்டது அதன் பிறகு உரிமம் முடிவடைந்த பின்னர் எவ்வளவு வெட்டி எடுக்கப்பட்டது என்பது குறித்து அறிக்கை எதுவும் இல்லை. எதிரிக்கு குவாரியை நிர்வாகம் செய்ய இயலாததால் அவர் உரிமத்தை புதுபித்து மேல் நடத்தவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அனுமதி இல்லாத குவாரிகள் மீது நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் புவியிலாளர் தூண்டுதலின் பேரில் உரிய அனுமதி பெற்றிருந்த

எதிரிக்கு சொந்தமாக குவாரி மீது வேண்டுமென்றே பொய்யான வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.  வழக்கிற்கும், எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.